## ஞானத்ருஷ்டி அழகப்பங்கார்

## வாழி திருநாமம்

சீராரும் செங்கமலத் திருத்தாளிணை வாழியே
திருமுழந்தாளும் குறங்கும் திருவரையும் வாழியே
பாராரும் திருவுந்திப் பட்டாடை வாழியே
பங்கயத்தார் உறை மார்பும் பணைப் புயமும் வாழியே
காராரும் திருக்குழலும் கழுத்தழகும் வாழியே
கருணை பொழி விழியும் காதிரண்டும் வாழியே
ஏராரும் திருநாசி இலங்கு முடி வாழியே
எங்கள் அழகப்பையங்கார் இனிதூழி வாழியே

---